## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தேதி (13.04.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது .

திரு.க.சரவணகுமார்
தனி அலுவலர் / ஆணையாளர்

**பொருள் எண்.1**

தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுய நிதி படிப்புகளை நடத்திவரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்டதிருத்தம் செய்யப்பட்டுள்ளது பற்றிய அறிவிக்கை

••••••

தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 82–ன்படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், நகராட்சியால் சொத்து வரியானது விதிக்கப்படுகிறது. மேலும், வரிவிதிப்பு விதி 6–A -ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சொத்து வரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம் ) சட்டம் –2018, (2018, தமிழ்நாடு சட்டம் 6)–ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1)(சி)–க்கு கீழ்க்கண்டவாறு சட்டத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

**AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT, 1920**

**5. In Section 83 of the Tamil Nadu District Municipalities Act, 1920, in sub-section** (1)

(1) for clause (c), the following clause shall be substituted, namely:-

"(c) buildings used for educational purpose including hostels and libraries, run by the Government or Municipality or any other local authority or institutions aided by the Government and buildings used for charitable purpose of sheltering the destitute or animals and orphanages, homes and schools for the deaf and dumb, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the council:

Provided that the buildings used for educational purpose by the Government aided institutions for conducting self-financing courses shall be subject to levy of property tax;":

(2) in the proviso, for the Expression "clauses (a), (c) and (e)", the expression "clauses (a) and (e)" shall be substituted.

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும்

மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக குளச்சல் நகராட்சி தனி அலுவலரின் தீர்மானம் எண். 1816 நாள்.13.04.2018 –ல்

1) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடஙகளுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்.
2) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் ,1920, பிரிவு 83(1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடஙகளை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடஙகள் உட்பட ஏனைய கட்டிடஙகள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்கவும்.
3) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் பட்சத்தில் அந்நிறுவனஙகளின் கட்டிடஙகளுக்கு சொத்துவரி விதிக்கவும்.
4) கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடஙகள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனஙகளின் கட்டிடஙகள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடஙகு சொத்து வரியாக விதிக்கவும்.
5) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)–ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரையாண்டிலிருந்து, மேற்படி கட்டிடஙகளுக்கு சொத்துவரி விதிக்கவும்.
6) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 78(3)–ன் படி ஆட்சேபனைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் அஙகீகாரத்திற்காக.

இதன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 78(3)–ன் படி, மேற்கண்ட முறையில் சொத்துவரி விதிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விவரம் அறிவிப்பு செய்யப்படுகிறது. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்கு பின்னர், சொத்துவரி விதிப்பினை மேற்கொள்வது குறித்து இறுதி செய்யப்படும்.

எனவே மேற்குறிப்பிட்ட சொத்து வரி விதிப்பு குறித்து ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின், அதனை, குறிப்பிட்ட நாட்களுக்குள், எழுத்து மூலமாக **ஆணையர், குளச்சல் நகராட்சி** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

ந.க.எண்.432/2018/அ1

**தீர்மானம் எண்.1816 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்திய செஞ்சிலுவை சங்கம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 2017–18–ம் ஆண்டிற்கான இந்நகராட்சியின் சந்தா தொகையாக ரூ.2500/– பொது நிதியிலிருந்து வழஙக மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.271/2015/சி1

**தீர்மானம் எண்.1817 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்கான மின் மோட்டார் மற்றும் வால்வுகள் ஒகி புயலின் பாதிப்பினால் பழுதடைந்த நிலையில், சீரான குடிநீர் வினியோகத்திற்கு போதுமான மின் மோட்டார் மற்றும் வால்வுகள் இருப்பில் இல்லாத காரணத்தால், குடிநீர் வினியோகம் பாதிக்கப்படாமல் தடுக்கும் பொருட்டு, புதியதாக மின்மோட்டார், கேபிள், பேனல் போர்டு மற்றும் வால்வுகள் கொள்முதல் செய்வதற்காக உத்தேச மதிப்பீடு ரூ.6,70,000/–க்கு தயார் செய்யப்பட்டு, குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும், சீரான குடிநீர் வினியோகம் மற்றும் குடிநீர் வீணாவதை தடுக்கும் பொருட்டும், கீழ்காணும் உபகரணங்களை நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் கொள்முதல் செய்து அதற்கான செலவினம் ரூ.652281/–ஐ குடிநீர் வழஙகல் நிதியிலிருந்து வழஙகியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்கள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 10 எச்.பி திறன் கொண்ட நீர் மூழ்கி மோட்டார் | 5 |
| 2 | பேனர் போர்டு | 5 |
| 3 | கேபிள் | 750 மீட்டர் |
| 4 | 3” சுவிஸ் வால்வு | 6 |
| 5 | 4” சுவிஸ் வால்வு | 6 |
| 6 | 5” சுவிஸ் வால்வு | 3 |
| 7 | 6” சுவிஸ் வால்வு | 2 |

ந.க.எண்.60–1/2012/இ1

**தீர்மானம் எண்.1818 அங்கீகரிக்கப்பட்டது.**

ஆணையர்(கூ.பொ)
குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி (30.04.2018) திஙகட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது .

திரு.க.சரவணகுமார்
தனி அலுவலர் / ஆணையாளர்

பொருள் எண்.1

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்கு ஆதாரமாக விளஙகும் 21 ஆழ்துளை கிணறுகளில், பெரும்பாலான ஆழ்துளை கிணறுகளில் குடிநீர் உப்பு சுவை உடையதாக மாறியுள்ளதால், பொது மக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். எனவே பொது மக்கள் நலனை கருத்தில் கொண்டு, வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில் மற்றும் பாலத்தன்கரை ஆகிய இடஙகளில் கூடுதலாக இரண்டு ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.7,50,000/–க்கும், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழஙகல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.347–2/2018/இ2

**தீர்மானம் எண்.1819 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.2

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக பர்னட்டிவிளை, பாலத்தன்கரை, வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில், சீம்பிளிவிளை மற்றும் கே.எஸ்.எஸ்.எஸ் காலனி ஆகிய இடஙகளில் 21 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் 8 எண்ணம் ஆழ்துளை கிணறுகளில் இருந்து எடுக்கப்படும் தண்ணீர் சுவை மாறுபட்டு, உப்பு கலந்த நீர் போன்று உள்ளதால், கடற்கரை பகுதிகளுக்கு வினியோகம் செய்யப்படும் குடிநீர் உப்பு சுவையுடன், சுகாதாரமற்றதாக உள்ளது என கடற்கரை பகுதி மக்களால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பொது நலன் கருதி, நல்ல சுவையுடைய சில ஆழ்துளை கிணறுகளின் தண்ணீரை உப்பு சுவையுடைய ஆழ்துளை கிணறுகளில் இணைத்து உப்பு தன்மையை குறைக்கும் பணியினை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.6,00,000/–க்கும், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழஙகல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.347/2018/இ2

**தீர்மானம் எண்.1820 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.3

இந்நகராட்சியில் குடிநீர் வினியோகத்திற்காக வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில் மற்றும் பாலத்தன்கரை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகள் வறட்சியின் காரணமாக நீர் ஊற்று மிகவும் குறைவாகவும், தண்ணீர் நிறம் மாறியும் உள்ளது. இதனால் பொதுமக்களுக்கும் சீரான முறையில் குடிநீர் வழஙக இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதி, அனைத்து ஆழ்துளை கிணறுகளையும் Flushing செய்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,90,000/–க்கும் மேற்படி பணியினை

நகராட்சி குடிநீர் வழஙகல் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.347–2/2018/இ2

**தீர்மானம் எண்.1821 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கல்வி நிறுவனஙகளுக்கு சொத்துவரி விதிப்பு தொடர்பாக தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் ரூ.17892/– வழஙக மன்ற அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.432/2018/அ1

**தீர்மானம் எண்.1822 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன் அச்சடிப்பதற்கான உத்தேச செலவு ரூ.80,000/– ற்கு மன்ற அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1117/2015/அ1

**தீர்மானம் எண்.1823 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் நவீன சந்தை 2017–18–ம் ஆண்டிற்கு ரூ.13,01,000/–க்கு ஏலம் விடப்பட்டது. இந்நிலையில் 2018–19–ம் ஆண்டிலிருந்து தினசரி சந்தையின் முன்புற நுழைவு வாயிலிருந்து தொடஙகும் 18 தற்காலிக கடைகள் நிரந்தரக கடைகளாக மாற்றப்பட்டு 20.03.2018–ல் பொது ஏலத்திற்கு விடப்பட்டதின் மூலம் ரூ.12,96,000/–க்கு வருவாய் வரப்பெற்றுள்ளது. மேலும் மீதமுள்ள நவீன மீன் சந்தை ஸ்டால் பொது ஏலம் விடப்பட்டதில் முன் வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ள எவரும் முன்வரவில்லை. தற்சமயம் திரு.கென்னடி என்பவர் தாமாக முன்வந்து, முன்வைப்புத் தொகை செலுத்தாமல் மாதத்திற்கு ரூ.42500/– வீதம் 11 மாதத்திற்கு ரூ.467500/– மற்றும் சேவை வரி ரூ.84150/– சேர்த்து ரூ.551650/– குத்தகைக்கு கேட்டுள்ளார். எனவே மேற்படி நபருக்கு (01.05.2018 முதல் 31.03.2018 ) 2018–19–ம் ஆண்டிற்கு நவீன மீன் ஸ்டாலை குத்தகைக்கு வழஙகுவதற்கு மன்ற அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.11062/2015/அ1

**தீர்மானம் எண்.1824 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி மற்றும் வரியில்லா இனஙகளை ஒலி பெருக்கி மூலம் வரி செலுத்த விளம்பரம் செய்வதற்கு ஆடியோ பதிவு செய்த வகையில் ரூ.800/– செலவு செய்யப்பட்டது. மேற்படி தொகையை வழஙக மன்றம் அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4826/20124/அ1

**தீர்மானம் எண்.1825 அஙகீகரிக்கப்பட்டது.**

ஆணையாளர்/தனி அலுவலர்,
குளச்சல் நகராட்சி